# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>அஸ்கிரிய மற்றும் மல்வத்து மஹா பிரிவேனாக்களுக்கு</u>**
**<u>இந்திய உயர் ஸ்தானிகரால் அத்தியாவசியப் பொருட்கள் அன்பளிப்பு</u>**

2025 மே 16 ஆம் திகதி கண்டிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் மல்வத்து பீடத்தின் அதி வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள மஹாநாயக்க தேரர் அவர்களிடமும் அஸ்கிரிய பீடத்தின் அதி வணக்கத்துக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன மஹாநாயக்க தேரர் அவர்களிடமும் நல்லாசிகளை பெற்றிருந்தார். இந்த சந்திப்பின்போது கடந்த மாதம் இந்திய பிரதமர் அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை மூலமாக கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் குறித்து இரு மஹாநாயக்க தேரர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதுடன் இரு நாடுகளினதும் மக்களுக்கு நன்மை தரும் வகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அத்துடன் முன்மொழியப்பட்ட, இருதரப்பு திட்டங்களுக்காக அவர்களது ஆசிகளுக்காகவும் பிரார்த்திக்கப்பட்டது.

02. மேலும், மல்வத்து மற்றும் அஸ்கிரிய மஹா பிரிவேனாக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான, கணனிகள், மேசைகள், கதிரைகள், கட்டில்கள், அலுமாரிகள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்கள் உயர் ஸ்தானிகரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இரு பீடங்களினதும் சங்கைக்குரிய தேரர்கள் மற்றும் இளம் துறவிகளின் ஆன்மீக மற்றும் கல்வி ரீதியான இலக்குகளை அடைவதற்கு உதவும் வகையில் இப்பொருட்கள் வழங்கப்பட்டன.

03. முன்னதாக 2025 மே 14 ஆம் திகதி உயர் ஸ்தானிகர் அவர்கள் ஸ்ரீ தலதா மாளிகையின் கௌரவ தியவதன நிலமே அவர்களை சந்தித்திருந்தார். குஜராத்தின் தெவ்னிமோரியிலிருந்து இலங்கைக்கு புத்தபெருமானின் புனித சின்னங்களை அழைப்பித்து தரிசனத்துக்காக காட்சிப்படுத்தும் திட்டம் உட்பட இலங்கையுடனான பௌத்த மத உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் முன்னெடுத்துவரும் பல்வேறு திட்டங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. யோகா மற்றும் ஆரோக்கியத்தின் மேம்பாட்டுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சேதன மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட 100 யோகா விரிப்புகள் உயர் ஸ்தானிகரால் ஸ்ரீ தலதா மாளிகைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

*******

**கொழும்பு**
**17 மே 2025**